இணை இயக்குநர் (BOCW), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மதுரை
அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.எஸ்.ஜெ.சரவணன், பி.இ.,

சுருக்கம்

பணிக்குழு – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 வரையிலான காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணி நியமனம் - தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்து – ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

இணை இயக்குநர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் 03 DEC 2020

---

அ/1356/2020 நாள்: 11 .11.2020.

படிக்கப்பட்டது :

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.1734/PSD-F/2019, நாள்:20.02.2019,
2. சென்னை -6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணைகள் எண்ஜி3/44771/2018-2. நாள்:01.03.2019,
3. சென்னை-32, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயலாணைகள் எண்.ஒ1/4716/2019, நாள்:05.03.2019,
4. திண்டுக்கல், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்(BOCW)(பொ), அவர்களின் கடிதம் எண்.அ/249/2020, நாள்:22.09.2020,
5. மதுரை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்(BOCW) அவர்களின் கடிதம் எண்.அ/420/2020, நாள்:09.10.2020,
6. கோவை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்(BOCW)அவர்களின் கடிதம் எண்.அ/129/2020, நாள்:17.10.2020.

*****

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 2வதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலே 3வதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வலுவலகத்தின் சார்நிலை அலுவலகங்களில் பணியமர்த்தப்பட்ட கீழ்க்கண்ட இளநிலை உதவியாளர்களின் பணிவரன்முறையானது "The Regularization is subject to the outcome of the wps pending on the files of the Honorable High Court of Madras / Madurai Bench of the Honorable High Court of Madras relating to Group IV Services /2015-2016, 2016-2017, 2017-2018 recruitment". இவர்களது தெரிவு உறுதி செய்யப்பட்டது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

| வ.எண். | பெயர், பதவி மற்றும் அலுவலகம். | பணியில சேர்ந்த நாள். | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1. | திருமதி.ரா.சுமதி,<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (BOCW) அலுவலகம்,<br>திண்டுக்கல். | 11.03.2019<br>முற்பகல். | 11.03.2.19 முற்பகல். |
| 2. | திரு.அ.ராமன்,<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (BOCW) அலுவலகம்,<br>மதுரை. | 11.03.2019<br>பிற்பகல். | 11.03.2019 பிற்பகல். |
| 3. | செல்வி.ர.கோகுலம்,<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (BOCW) அலுவலகம்,<br>கோயமுத்தூர். | 15.03.2019<br>முற்பகல். | 15.03.2019 முற்பகல். |

மேற்கண்ட பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 28(1)-ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32-ன் படியும் அவர்கள் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகள் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. இத்தகுதிகாண் பருவகாலத்தில் அரசாணை எண்.130 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 22.07.2008-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அவர்கள் பணி நியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்வு பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் அவர்கள் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இணை இயக்குநர் (BOCW),
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
மதுரை

11/11/20

பெறுநர்:

1. திருமதி.ரா.சுமதி,
   இளநிலை உதவியாளர்,
   தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்(BOCW) அலுவலகம்,
   திண்டுக்கல்.

Scanned with CamScanner

2. திரு.அ.ராமன்,
இளநிலை உதவியாளர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்(BOCW) அலுவலகம், மதுரை.
3. செல்வி.ர.கோகுலம்,
இளநிலை உதவியாளர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்(BOCW) அலுவலகம், கோயமுத்தூர்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது:

1. தொழிலாளர் ஆணையர், சென்னை-6,
2. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை-32,

நகல்:

1. துணை இயக்குநர்(BOCW), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திண்டுக்கல், மதுரை மற்றும் கோயமுத்தூர்,
2. பணிப்பதிவேடு.

Scanned with CamScanner